## தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் - 2015

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 22,286,717 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உடைந்த பொருட்களாக 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இணங்காணப்பட்ட முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட கணனி மற்றும் 06 உப பாகங்களின் கிரயமான ரூபா 472,340 தொகை மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கங்கள் இரு தடவை கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் அச்சிடல் இயந்திரங்களுக்குரிய கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வுப் பெறுமதியை பட்டோலைகளுடன் ஒப்பிட்டபோது முறையே ரூபா 458,907 மற்றும் ரூபா 558,376 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 18,372,855 பெறுமதியான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களுக்குரிய உபயோக ஆவணங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் மென்பொருள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 02/2014 (v) மற்றும் (vi) ஆம் பந்திகள் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வின் போது பயன்படுத்த முடியாததாக இனங்காணப்பட்ட 25 நிலையான சொத்துக்களை உள்ளடக்கிய 35 பொருட்களை அகற்றுதல் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பிரிவு | 2015 சனவரி முதல் திசெம்பர் வரை 9 வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 118,438 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 14,850 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 985,307 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,000,157 தொகையான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் வேதனங்களை உள்ளடக்கிய ஊழியர் நலன்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 2,327,372 ஆல் அதிகரித்திருந்த போதிலும், அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைத்த பணம் மற்றும் மீண்டெழும் மானியம் ரூபா 3,409,690 ஆல் அதிகரித்திருந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது மிகையொன்று வரை அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 7,922,814 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 16,425,692 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உலக வங்கி உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட பொதுக் கல்விச் செயற்திட்டம் 2 (GEP-2) (1994 – 2002) இன் கீழ் பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்காக சேர்க்கப்பட்ட நூலகர்கள் மற்றும் அந்தப் பாடசாலைகளின் ஆசிரிய நூலகர்களுக்காக தேவையான மனித வளங்களைப் பயிற்றுவித்தல் தேசிய நூலக மற்றும் விஞ்ஞான நிறுவகத்தின் நோக்கங்களாகும்.

பாடநெறிகளை நடாத்துதல் தொடர்பான செயலாற்றலை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆசிரிய நூலகர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு வழங்குதல் நடைமுறைக்கு ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) மற்றும் ஆசிரிய நூலகர் தொடர்பான பட்டபின் டிப்ளோமா (PGTL) போன்ற தகைமைகளை உள்ளடக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் ஆசிரியர் கோவை பிரமாணக் குறிப்பில் அது உள்ளடக்கப்படாமையின் காரணமாக அப் பாடநெறிக்கான கேள்வி குறைவடைந்திருந்தது.

(ஆ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டியின் 4 (அ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் பாடநெறி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் மற்றும் கையளிக்கப்பட வேண்டிய பட்டப்பின் படிப்பு, டிப்ளோமா சான்றிதழ் பத்திரம் மற்றும் ஏனைய கலைமானி தேர்வுகளை தீர்மானிக்கும் போது ஆணைக்குழுவின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது 2003 ஆரம்ப ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரை 13 வருட காலத்தில் பட்டபின் படிப்பு பாடநெறிகள் 39 தடவைகளும், டிப்ளோமா பாடநெறிகள் 18 தடவைகளும், சான்றிதழ் பத்திர பாடநெறிகள் 34 தடவையும் ஆக பாடநெறிகள் 91 தடவை நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

(இ) நிறுவகத்தில் பாடநெறிகள் நடாத்தப்பட்ட தடவைகளின் எண்ணிக்கையில் 37 சதவீதம் சான்றிதழ் பத்திர பாடநெறிகளாக இருந்தமை மற்றும் 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்திருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 42 சதவீதம் சான்றிதழ் பத்திர பாடநெறிக்காக பதிவுசெய்திருந்த மாணவர்களாகையால் நிறுவகம் குறுங்கால பாடநெறிகளுக்கு கூடிய பங்களிப்பை வழங்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஈ) தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தில் 2015 திசெம்பர் 31 வரையான ஒரு வருட காலத்தில் நடைபெற்ற பாடநெறிகளுக்காக சமூகமளித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 293 ஆக இருந்த போதிலும், சான்றிதழ் பத்திரம் 56 மாணவர்களிற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2007 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட முதுமானி தத்துவவியல் / முனைவர் பட்டம் 2007/2010 மற்றும் 2011/2014 மூன்று வருட பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆண்டு வரையில் முறையே 9 வருடங்கள் மற்றும் 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பாடநெறிகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(ஊ) நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான கலைமானி (MLS – FT) பாடநெறி 2013/2015 கல்வி ஆண்டிற்காக பதிவுசெய்திருந்த 4 மாணவர்களிலிருந்து ஒரு மாணவர் மாத்திரம் பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருந்தார்.

(எ) 1991 இன் 01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டியின் 12(6) ஆம் பிரிவின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது கலைக் குழுக் கூட்டம் 9 தடவைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் வழிகாட்டலின் 12(1)(இ) மற்றும் (உ) பிரிவுகளின் கீழ் குழு அங்கத்தவர்களின் குழுக்கூட்டத்திற்காக சமூகமளித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படவோ அல்லது ஸ்தாபிப்பதற்கு கருதுகின்ற பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு நூலகத்திற்கும் தகவல் விஞ்ஞான பிரிவின் தலைவர் வழிகாட்டலின் 12(1) (இ) பிரிவின் கீழ்

பெயரிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது எந்த குழுக் கூட்டத் தடவைக்கும் சமூகமளித்திருக்கவில்லை.

(ii) இலங்கை தேசிய நூலக சங்கத்தின் பிரதிநிதியொருவர் வழிகாட்டலின் 12(1)(உ) பிரிவின் கீழ் பெயரிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ஒரு தடைவ மாத்திரம் குழுக் கூட்டத்திற்கு பங்குபற்றியிருந்தார்.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டிலும் பொருட் பதிவேட்டுப் புத்தகங்களிலும் கணனி மற்றும் கணனி உபபாகங்கள் வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் காண்பிக்கப்படாமையின் காரணமாக பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற பௌதீக மதிப்பீட்டுடன் ஒப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2014 செப்தெம்பர் மாதம் ரூபா 107,500 பெறுமதியான கணக்கீட்டு தொகுதியொன்றை கணக்கீட்டு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும் நிறுவகத்தின் தேவையினை உரியவாறு இனங்காணாது கணனி மென்பொருள் முறைமை ஸ்தாபிக்கப்பட்டமையின் காரணமாக நாட்குறிப்புப் பதிவுகள் கணனி மென்பொருள் முறைமை ஊடாக அச்சிடும் போது அநேகமான நாட்குறிப்புப் பதிவுகளின் கூட்டுத்தொகை சரியாக இல்லாமை, வரவு மற்றும் செலவு மீதிகள் அசாதரணமாக இருந்தமை, பூர்த்திசெய்யப்படாத அச்சிடல் போன்ற வழுக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டன. இதன் காரணமாக மென்பொருள் முறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கட்டுப்பாடு | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் கணனி உபபாகங்களின் கிரயம் இனங்காணப்படாமை. |
| | (ii) கணனி உபபாகங்களை அகற்றும் போது அதனுடன் தற்போது பயன்படுத்தப்படுகின்ற அந்த கணனிகளின் ஏனைய சகல உபகரணங்களும் அகற்றப்பட்டமை. |
| | (iii) நிலையான சொத்துப் பதிவேடு கணக்குகளுடன் சீராக்கப்படாமை |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளச் செலுத்த வேண்டிய நூலக வைப்புக்களின் கட்டுப்பாடு | (i) | நூலக வைப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) | மீளச் செலுத்த வேண்டிய நூலக வைப்புப் பதிவேட்டிற்கும் பட்டோலையின் வைப்புப் பெறுமதிக்குமிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை |
| | (iii) | மீளச் செலுத்த வேண்டிய நூலக வைப்புக்களின் பட்டோலைகள் கணக்குகளுடன் சீராக்கப்படாமை |